රාජ්‍ය පරිපාලන, ස්වදේශ කටයුතු, පළාත් සභා හා පළාත් පාලන අමාත්‍යාංශය
பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு
**Ministry of Public Administration, Home Affairs, Provincial Councils and Local Government**

ඒකාබද්ධ සේවා අංශය | இணைந்த சேவைகள் பிரிவு | **COMBINED SERVICES DIVISION**

නිදහස් චතුරශ්‍රය, කොළඹ 07, ශ්‍රී ලංකාව. | சுதந்திரச் சதுக்கம், கொழும்பு 07, இலங்கை. | Independence Square, Colombo 07, Sri Lanka

දුරකතන / தொலைபேசி: **(94) 011- 2694560** Telephone
ෆැක්ස් / தொலைநகல்: **(94) 011- 2692254** Fax
ඊ-මේල් / மின்னஞ்சல்: **dgcs@pubad.gov.lk** E-mail
වෙබ් අඩවිය / இணையத்தளம்: **www.pubad.gov.lk** Web Site

මගේ අංකය / எனது இல / My No: COM/TRANS/VI-25
ඔබේ අංකය / உமது இல / Your No:
දිනය / திகதி / Date: 2022.07.06

அனைத்து திணைக்களத்தலைவர்களின் கவனத்திற்கு

**<u>முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவையின் அலுவலர்களை குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்திற்கு தற்காலிகமாக இணைப்பு செய்தல்</u>**

குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்தின் கொழும்பு அலுவலகத்திற்கு தினசரி வருகை தரும் சேவை பெறுபவர்களின் எண்ணிக்கை நாளாந்தம் அதிகரித்துள்ளமையினால், தற்போது நிலவும் சூழ்நிலையை வெற்றிகரமாக முகங்கொடுப்பதற்கு அந்த திணைக்களத்தில் பணிபுரியும் ஊழியர்களுக்கு மேலதிகமாக முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவையின் அலுவலர்களை தற்காலிக அடிப்படையில் மூன்று மாத காலத்திற்கு இணைப்பு செய்து தருமாறு குடிவரவு மற்றும் குடியகல்வு கட்டுப்பாட்டாளர் நாயகம் அவர்களால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

02. அதன்படி, தங்கள் அலுவலகத்தில் பணியாற்றும் பத்தரமுல்லை குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்தின் பிரதான அலுவலகத்திலிருந்து சுமார் 10 கிலோமீற்றர் தூரத்திற்குள் வசிக்கும் குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்தில் 03 மாதங்களுக்கு தற்காலிகமாக இணைந்து பகல் மற்றும் இரவு நேர அட்டவணை முறையில் பணிபுரிய விரும்பும் முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவை அலுவலர்களின் கோரிக்கைகள் மற்றும் அது தொடர்பான தங்களது பரிந்துரை என்பவற்றை கீழே குறிப்பிட்டுள்ள மின்னஞ்சல் முகவரிகளுக்கு **2022.07.11 ஆந் திகதிக்கு முன்னர்** அனுப்பி வைக்குமாறு தயவுடன் தெரிவிப்பதுடன், கோரிக்கைகள் கிடைக்கும் ஒழுங்குமுறைப்படியே இணைப்பு செய்தல் நடைமுறைப்படுத்தப்படும் என்பதனையும் மேலும் தெரிவித்துக்கொள்கிறேன்.

dgcs.pubad@gmail.com
dcs1.pubad@gmail.com
ddcs4.pubad@gmail.com

03. அவசரத் தேவையாக இதனை கருதி இது தொடர்பில் முன்னுரிமை அளித்து நடவடிக்கை மேற்கொள்வது நன்று.

ஒப்பம்./ எஸ். ஆலோக்கபண்டார
இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம்